1981 ஏப்ரல் 16]

ஆம்பூர் கால்நடை மருத்துவமனைக்கு சொந்த கட்டிடம் கட்டும் திட்டம்.

*வினா எண் 771—திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூர் நகரில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு சொந்த கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[முற்பகல் 9.50]

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரில் கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டிடம் வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்து வருகிறது. அதை இந்த நடப்பு ஆண்டிலேயே அரசு நிறைவேற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரில் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்காக தகுந்த இடம் இல்லாமையால் 1954ஆம் ஆண்டிலிருந்தே வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. தகுதியான இடம் கிடைக்காததால் நிரந்தரக் கட்டிடம் கட்ட திட்டம் தீட்டப்படவில்லை. தீவிர முயற்சிக்குப் பின், ஆம்பூர் நகராட்சி ஆணையாளர் 0.35 ஏக்கர் நிலத்தை—நகராட்சிப் புறம்போக்கு நிலம் சர்வே எண் 448/2— ஒதுக்கி, அதற்காக தீர்மானம் நிறைவேற்றி உள்ளார். ஆனால் மீண்டும் நகராட்சி ஆணையாளர் மேற்படி நிலத்தை ஆம்பூர் ரோட்டரி கிளப்பிற்கு ஒதுக்கி தீர்மானம் இயற்றி இருப்பதாக ஆம்பூர் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் கூறியுள்ளார். அதன் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு மேற்படி நிலத்தை இத்துறைக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி நிலத்தை ஏற்கனவே தீர்மானம் இயற்றியவாறு இத்துறைக்குக் கொடுக்கவேண்டும் என்று ஆம்பூர் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார். எனவே, நிலம் கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்ட பின்புதான் ஆம்பூர் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது ஆம்பூர் நகராட்சி ஆணையாளர் அந்த நிலத்தை அரசு கால்நடை மருந்தகத்திற்குக் கொடுப்பதற்காக தீர்மானம் நிறைவேற்றி

உள்ளார்கள். ஆகவே, அரசு அங்கே உடனடியாக கட்டிடம் கட்டுவதற்கு நடப்பு ஆண்டிலேயே நடவடிக்கை எடுத்துக் கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போது ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நகராட்சி ஆணையாளர் மேற்படி நிலத்தை ஆம்பூர் ரோட்டரி கிளப்பிற்கு ஒதுக்கி தீர்மானம் இயற்றி இருப்ப தாக ஆம்பூர் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் கூறியுள்ளார். அதன்பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு மேற்படி நிலத்தை இத்துறைக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி நிலத்தை ஏற்கனவே தீர்மானம் இயற்றிய வாறு இத்துறைக்குக் கொடுக்கவேண்டும் என்று ஆம்பூர் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார். நிலம் கொடுக்கப்பட்டதும், கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்,

அ. உறுப்பினர் திரு. ராஜசேகரன் கைது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை நகரப் போலீஸ் கமிஷனர் அவர்களிடமிருந்து இன்று காலை 9.30 மணிக்கு வந்துள்ள கீழ்க்கண்ட செய்தியை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்:

I have the honour to inform you that Thiru V. Rajasekharan M. L. A. representing Dr. Radhakrishnan Nagar Constituency was arrested at about 08-45 hours today (16-4-81) along with the members of Sivaji Ganesan Rasigar Manram in X Station, Crime No. 245/81 under Section 143 I.P.C. read with Section 41 of the City Police Act on Kamaraj Salai near the Labour Statue for coming in a procession to resort to a fast in violation of the regulatory orders in force inthe City. He has been taken to the Office of the Commissioner of Police.

3. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு என். எஸ். வி. சித்தன் : இந்தப் பிரச்னை சம்பந்த மாகத்தான் நான் ஒழுங்குப்பிரச்னை எழுப்புவதாக இருந் தேன், இது சம்பந்தமாக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட கொடுத்து இருக்கிறேன்.

**　　　**　　　**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.